சென்னை பொது மருத்துவ மனை.

*246 வின.—திரு. கே.எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை சென்ட்ரல் ஜெயிலை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அந்த இடத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு எதும் அரசிடம் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்சமயம் சென்னை மத்திய சிறைச்சாலையை வேறிடத்திற்கு மாற்றுவதில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அங்கேயில்லாவிட்டாலும் கூட, கூவம் நதிக்குத் தெற்கே உள்ள இடத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான இடம்—அதை மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கி—ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் முயற்சியை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னைப் பொது மருத்துவ மனை அமைந்திருக்கும் அதே இடத்தில்தான் அதன் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதைக் கடந்து வேறு இடத்திற்குச் சென்றால், அது தனி மருத்துவ மனையாகத்தான் அமைய வேண்டும். அப்படித் தனியாக மருத்துவ மனை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 2 மைல் 4 மைல் தள்ளி இன்னொரு மருத்துவ மனை அமைத்தால் அது சென்னை நகர மக்களுக்கு மிகவும் பயன்படும். அதே நேரத்தில் சென்னை பொது மருத்துவ மனையின் பணிகளை முன்னேற்றுவதற்காக, அங்கே இருக்கிற மருத்துவ சிகிச்சையை உயர்த்துவதற்காக, போஸ்ட்–கிராஜுவேட், மேற்பட்டப் படிப்புக்கு அதை உயர்த்துவதற்கு, அதை ஒரு மேற்படிப்பு மருத்துவக் கல்லூரியாக உயர்த்துவதற்குப் படிப்படியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு.

*247 வின. திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

1971-72-ஆம் ஆண்டிற்கு மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுள் பெண்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 288 பெண்கள்.